திருமுறைப் பதிப்பு நிதி வெளியீடு எண் 10.

உ
சிவ சிவ
திருச்செந்திலாண்டவன் துணை

மாணிக்கவாசக சுவாமிகள்
அருளிச் செய்த

# திருவாசகம்

(எட்டாம் திருமுறை)

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர்
காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்
8-4-1950ல் நிறுவிய
குமரகுருபர சுவாமிகள் நினைவுப் பன்னிரு திருமுறைப்
நிதியிலிருந்து ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களின்
திருவுளப்பாங்கின் வண்ணம் வெளியிடப் பெற்றது.

பதிப்பாசிரியர்
M. குமரகுருபரன் பிள்ளை, B. A., B. L.,
நிரந்தரத் தலைவர்
ஸ்ரீகுமரகுருபரன் சங்கம் – ஸ்ரீவைகுண்டம்

டம்] 22—5—1962 [விலை 56 ந. பை.

உ

சிவ சிவ

# பதிப்புரை

வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்தென்
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே.

—வடலூர் இராமலிங்க சுவாமிகள்

திருநெறியெனப் போற்றப் பெறுவதாகிய சைவசமயத்தின் உயர்நிலையையும், இறைவன் இயல்பையும், அவன் அடியார் பெருமையையும் தெளிவாக விளக்குவன பன்னிரு சைவத் தமிழ்த் திருமுறைகளாம். இவை பன்னிரண்டையும் மக்கள் எளிதில் பெறவும், உள்ளுருகிப் பயின்று சிந்தையில் இருத்தவும், அவற்றின் மேன்மையை உணர்ந்து உய்யவும், இவற்றை நன் முறையில் பதிப்பித்து உதவும் பெருமை, திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களுக்கே உரியது. பன்னிரு திருமுறைகளுள், மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்துள்ள திருவாசகமும் திருச்சிற்றம்பலக் கோவையாரும், எட்டாம் திருமுறையாகத் தொகுக்கப் பெற்றுள்ளன. இவற்றுள் திருச்சிற்றம்பலக் கோவை யார், பேராசிரியர் உரை பழைய உரை ஆகியவற்றோடு, திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் 8—4—1950-ல் நிறுவிய ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவுப் பன்னிரு திருமுறைப் பதிப்புநிதி வெளியீடாக ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களின் திருவுளப் பாங்கின் வண்ணம் விகாரி ஆண்டு பங்குனித் திங்களில் (1960-ல்) வெளியிடப் பெற்றுள்ளது. இப்